| வினாத் தொகுப்பு எண் : |
| --- |
| |

# CYGS/2022

| பதிவு எண் | | | | | | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |

## 2022

## தாள் – II

## கட்டாய தமிழ்மொழி தகுதித்தேர்வு, (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டப்படிப்பு தரம்)

## இந்த வினாப் புத்தகம்

## பகுதி – அ கட்டாய தமிழ்மொழி தகுதி தேர்வு (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பகுதி-ஆ பொது அறிவு (பட்டப்படிப்பு தரம்) உள்ளடக்கியது

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

---

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. **பகுதி-அ-வில் குறைந்தபட்ச மதிப்பெண் (40% அதாவது 60 மதிப்பெண்) பெறாத தேர்வர்களின் பகுதி-ஆ-விற்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. பகுதி-அ-வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின், பகுதி ஆ-வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மட்டும் தரவரிசை பட்டியலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.**
4. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
5. **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.**
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
8. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
9. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. கேள்வி வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
13. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

## SPACE FOR ROUGH WORK

# பகுதி-அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) எவன் ஒருவன்
(B) எவன்னொருவன்
(C) எவனொருவன்
(D) என்னொருவன்
(E) விடை தெரியவில்லை

2. உயர்வு + அடைவோம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) உயர்வடைவோம்
(B) உயர்அடைவோம்
(C) உயர்வுவடைவோம்
(D) உயர்வு அடைவோம்
(E) விடை தெரியவில்லை

3. பிரித்தெழுதுதல் :

'வேதியுரங்கள்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.

(A) வேதி + யுரங்கள்
(B) வேதி + உரங்கள்
(C) வேத் + உரங்கள்
(D) வேதியு + ரங்கள்
(E) விடை தெரியவில்லை

4. எதிர்ச்சொல் எடுத்தெழுதுதல்.

எளிது

(A) அரிது
(B) சிறிது
(C) பெரிது
(D) வறிது
(E) விடை தெரியவில்லை

5. சொல்லும் பொருளும் பொருந்தாத இணை எது?

(A) கொம்பு – கிளை

(B) புழை – துளை

(C) கான் – காட்சி

(D) அசும்பு – நிலம்

(E) விடை தெரியவில்லை

6. பொருந்தாத இணை எது?

(A) சூழி – தலை

(B) குழை – காது

(C) கிண்கிணி – இடை

(D) சுட்டி – நெற்றி

(E) விடை தெரியவில்லை

7. பொருந்தாத இணை எது?

(A) குறிஞ்சி – யாமம்

(B) முல்லை – எற்பாடு

(C) மருதம் – வைகறை

(D) பாலை – நண்பகல்

(E) விடை தெரியவில்லை

8. பொருந்தாத இணையைக் காண்க.

(A) சாஸ்தி – மிகுதி

(B) விஸ்தாரம் – அளவு

(C) பொக்கிஷம் – செல்வம்

(D) நமஸ்காரம் – வணக்கம்

(E) விடை தெரியவில்லை

9. வழூஉச் சொல் இல்லாத தொடரை எழுதுக :

(A) அதைச் செய்தது நான் அன்று

(B) அதைச் செய்தது நான் அல்லேன்

(C) அதைச் செய்தது நான் அல்ல

(D) அதைச் செய்தது நான் அல்லர்

(E) விடை தெரியவில்லை

10. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லில் சரியானதைக் குறிப்பிடுக.

(A) Vowel – மெய்யெழுத்து

(B) Consonant – ஆய்த எழுத்து

(C) Homograph – ஒப்பெழுத்து

(D) Discussion – உயிரெழுத்து

(E) விடை தெரியவில்லை

11. ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச் சொல் பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) Storm – புயல்

(B) Tempest – சுழல் காற்று

(C) Tornado – சூறாவளி

(D) Sea Breeze – கடற்காற்று

(E) விடை தெரியவில்லை

12. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க :

வானம் – வாணம்

(A) ஆகாயம் – வெட்டவெளி

(B) பட்டாசு – ஆகாயம்

(C) வெடி – ஆகாயம்

(D) ஆகாயம் – வெடி

(E) விடை தெரியவில்லை

13. தொடர் அமைப்பினை கண்டறிக :

"பாடி மகிழ்ந்தனர்"

(A) வினையெச்சத் தொடர்
(B) பெயரெச்சத் தொடர்
(C) வினைமுற்றுத் தொடர்
(D) வேற்றுமைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

14. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற் – பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

(A) பாடிய, கேட்டவர்
(B) பாடல், கேட்டவர்
(C) கேட்டவர், பாடிய
(D) பாடல், பாடிய
(E) விடை தெரியவில்லை

15. சரியான அகர வரிசைச் சொற்களைத் தேர்வு செய்க :

(A) பானம், பிடி, புலி, பௌவம், பசி
(B) பசி, பானம், பிடி, புலி, பௌவம்
(C) பசி, பிடி, பானம், பௌவம், புலி
(D) பௌவம், பசி, பானம், புலி, பிடி
(E) விடை தெரியவில்லை

16. சரியான அகர வரிசையை எழுதுக :

(A) தூவி, துன்பம், தீவு, தாவி, தண்ணீர்
(B) துன்பம், தூவி, தீவு, தாவி, தண்ணீர்
(C) தூவி, தீவு, துன்பம், தண்ணீர், தாவி
(D) தண்ணீர், தாவி, தீவு, துன்பம், தூவி
(E) விடை தெரியவில்லை

17. அகர வரிசைப்படுத்தி எழுது :

நீலம், மாணிக்கம், வைரம், பவளம், முத்து

(A) நீலம், பவளம், மாணிக்கம், முத்து, வைரம்

(B) மாணிக்கம், பவளம், முத்து, வைரம், நீலம்

(C) பவளம், முத்து, மாணிக்கம், நீலம், வைரம்

(D) முத்து, பவளம், மாணிக்கம், நீலம், வைரம்

(E) விடை தெரியவில்லை

18. சொற்களை ஒழுங்குபடுத்துக.

ஜப்பானில் உருவாக்கிய பெப்பர் இயந்திர மனிதனே சாப்ட் வங்கி.

(A) ஜப்பானில் இயந்திர மனிதனே உருவாக்கிய சாப்ட் வங்கி பெப்பர்

(B) ஜப்பானில் உருவாக்கிய சாப்ட் வங்கி இயந்திர மனிதனே பெப்பர்

(C) ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்

(D) பெப்பர், ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே

(E) விடை தெரியவில்லை

19. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) தொகுதி; துள்ளி; தேடல்; தானியம்

(B) தேடல்; தானியம் ; தொகுதி ; துள்ளி

(C) துள்ளி; தொகுதி; தேடல்; தானியம்

(D) தானியம்; துள்ளி; தேடல்; தொகுதி

(E) விடை தெரியவில்லை

20. விடை வகையைச் சுட்டுக. "நீ தேர்வு எழுதவில்லையா?" என்ற வினாவிற்குக் "கை வலிக்கிறது" என்று கூறுவது.

(A) உற்றது உரைத்தல)

(B) உறுவது கூறல்

(C) இனமொழி

(D) சுட்டு விடை

(E) விடை தெரியவில்லை

21. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.
எலியும் பூனையும் போல –
உவமை கூறும் பொருள் கூறுக.

(A) ஒற்றுமை
(B) வேற்றுமை
(C) ஏமாற்றம்
(D) நட்பு
(E) விடை தெரியவில்லை

22. 'இலவு காத்த கிளி போல' என்ற சொற்றொடரில் உவமை விளக்கும் பொருள்?

(A) ஏமாற்றம்
(B) தோல்வி
(C) காவல்
(D) நன்மை
(E) விடை தெரியவில்லை

23. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் ; "பசுமரத்தாணி போல".

(A) பயனற்ற செயல்
(B) எளிதில் மனத்தில் பதிதல்
(C) எதிர்பாரா நிகழ்வு
(D) தற்செயல் நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

24. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடு :
Reform

(A) விழிப்புணர்வு
(B) சீருடை
(C) சீர்திருத்தம்
(D) விண்ணப்பம்
(E) விடை தெரியவில்லை

25. "உனக்குக் கதை எழுதத் தெரியுமா"? என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று விடை கூறுவது, ———————— விடை ஆகும்.

(A) வினா எதிர் வினாதல் விடை
(B) நேர் விடை
(C) இனமொழி விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

26. நிறுத்தற்குறி அறிக (எது சரியானது)

(A) கண்ணா வா. அதோ, அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்.

(B) "கண்ணா வா அதோ அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்".

(C) கண்ணா, வா ! அதோ ! அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்.

(D) கண்ணா வா அதோ அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்.

(E) விடை தெரியவில்லை

27. நிறுத்தற்குறி அறிக (எது சரியானது)

(A) வீடு கட்டியாயிற்று?

(B) "சட்டி உடைந்து போயிற்று"

(C) பணம் காணாமல் போனது !

(D) ஓவியம் குமரனால் வரையப்பட்டது.

(E) விடை தெரியவில்லை

28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று :

"எனக்குக் கூட ஒங்கள மாரி ஆடணுமுன்னு ஆசை"

(A) எனக்குக் கூட உங்கள மாரி ஆடவேண்டும் என்று ஆசை.

(B) எனக்குக் கூட உங்களை மாரி ஆடவேண்டும் என்று ஆசை.

(C) எனக்குக் கூட உங்களைப் போல் ஆடவேண்டுமென்று ஆசை.

(D) எனக்குக் கூட உங்களை மேரி ஆடவேண்டும் என்று ஆசை.

(E) விடை தெரியவில்லை

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று.

குடுத்துடு

(A) கொடு

(B) குடுத்து விடு

(C) குடித்து விடு

(D) கொடுத்து விடு

(E) விடை தெரியவில்லை

30. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.
அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் ———— ?

(A) யார்?
(B) என்ன?
(C) எப்படி?
(D) எவ்வாறு?
(E) விடை தெரியவில்லை

31. எவ்வகை வினா என்பதை எழுதுக.

மாணவரிடம், 'இந்த கவிதையின் பொருள் யாது'? என்று ஆசிரியர் மாணவரிடம் கேட்டல்

(A) அறியா வினா
(B) ஐய வினா
(C) கொடை வினா
(D) அறி வினா
(E) விடை தெரியவில்லை

32. காட்சியழகு - காட்சி + ய் + அழகு

பின்வருவனவற்றுள் தொடர்புபடுத்துக

(A) ஈகார ஈறு
(B) ஐகார ஈறு
(C) ஆகார ஈறு
(D) இகர ஈறு
(E) விடை தெரியவில்லை

33. சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) உயிர் + உயிர் — மலை + அருவி
(B) மெய் + மெய் — தமிழ் + அன்னை
(C) உயிர் + உயிர் — தென்னை + மரம்
(D) மெய் + உயிர் — தேன் + மழை
(E) விடை தெரியவில்லை

34. குறில் நெடில் மாற்றம், பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிக.

கொள் - கோள்

(A) புறங் கூறல் - வாங்கு

(B) புறங் கூறல் - கிரகம்

(C) கொல்லுதல் - கிரகம்

(D) வாங்கு - புறங்கூறல்

(E) விடை தெரியவில்லை

35. குறில்-நெடில் பிழையான சொல் எது?

(A) கல் - கால்

(B) கிரி - கீரி

(C) குடம் - கூடம்

(D) கெண்டை - கொண்டை

(E) விடை தெரியவில்லை

36. கூற்று, காரணம் - சரியா? தவறா?

கூற்று 1: பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி, காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள்.

கூற்று 2 : மதுரைக் காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார்.

(A) கூற்று இரண்டும் தவறு

(B) கூற்று 1 மட்டும் சரி

(C) கூற்று இரண்டும் சரி

(D) கூற்று 2 மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

37. கூற்று, காரணம்-சரியா? தவறா?

கூற்று : ண, ன, ந - இவை மூன்றும் மயங்கொலி எழுத்துகள்.

காரணம் : உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே பொருள் வேறுபாடும் உடையது.

(A) கூற்று : சரி; காரணம் : சரி

(B) கூற்று : சரி; காரணம் : தவறு

(C) கூற்று : தவறு; காரணம் : சரி

(D) கூற்று : தவறு; காரணம் : தவறு

(E) விடை தெரியவில்லை

38. கல்லாமை ஒழிக எனும் பொருளில் வரும் தொடர்?

(A) செய்தித் தொடர்

(B) வினாத் தொடர்

(C) விழைவுத் தொடர்

(D) உணர்ச்சித் தொடர்

(E) விடை தெரியவில்லை

39. நேரான தமிழ்ச்சொல் அறிக.

டெரகோட்டா

(A) மரச்சிற்பம்

(B) ஒற்றைக் கற்சிற்பம்

(C) சுடுமண் சிற்பம்

(D) மெழுகுச் சிற்பம்

(E) விடை தெரியவில்லை

40. பொருளின் செறிவை சுட்டுக.

(A) அகமும் புறமும்

(B) உற்றார் உறவினர்

(C) காலை மாலை

(D) கன்னங்கரேல்

(E) விடை தெரியவில்லை

41. சொல்லும் பொருளும் – பொச்சாப்பு

(A) தற்சார்பு

(B) சோர்வு

(C) பொறாமை

(D) பொறுமை

(E) விடை தெரியவில்லை

42. குமரிவட்டத்தில் 'உப்பர்' என்பது யாரைக் குறிக்கும்?

(A) உறவினர்

(B) உப்பளம்

(C) அப்பா

(D) தாத்தா

(E) விடை தெரியவில்லை

43. பிழை திருத்துதல்
சரியான பதிலை தேர்ந்தெடு.

(A) ஓரூர்
(B) ஓர் ஊர்
(C) ஒன்று ஊர்
(D) ஒரு ஊர்
(E) விடை தெரியவில்லை

44. பிழை திருத்துதல்
சரியான பதிலை தேர்ந்தெடு.

(A) ஓர் நகரம்
(B) ஓரிரு நகரம்
(C) ஒரு நகரம்
(D) ஒன்று நகரம்
(E) விடை தெரியவில்லை

45. சொல்லையும், பொருளையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒப்புமை | 1. | மேகம் |
| (b) | அற்புதம் | 2. | வள்ளல் |
| (c) | முகில் | 3. | வியப்பு |
| (d) | உபகாரி | 4. | இணை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடு.

இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் எதுவென்றால் அது மனித மூளைதான் என்று சொல்கிறார்கள். அதனுள் இருக்கும் செல்களின் எண்ணிக்கை ட்ரில்லியன். அவற்றில் நூறு பில்லியன் அதாவது பத்தாயிரம் கோடி நியூரான்கள் உள்ளன. இந்த நியூரான்களின் வலைபின்னல்தான் படைப்பு உணர்ச்சி, ஞாபகம், தன்னுணர்வு ஆகியன எல்லாம். மூளை முதுகு தண்டில் இருந்து முளைக்கிறது. தண்டிலிருந்து மடிப்பு மடிப்பாக முட்டைகோஸ் இலைகள் போல உள்ளது. மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மி.லி குருதி தேவைப்படுகிறது. சிறுமூளை தான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துகிறது.

46. இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் சிக்கலான ஒரு பொருள் எது?

(A) செல்கள்
(B) நியூரான்கள்
(C) மனித மூளை
(D) வலைபின்னல்
(E) விடை தெரியவில்லை

47. மனித மூளையில் இருக்கும் செல்களின் எண்ணிக்கையைக் கூறு?

(A) டிரில்லியன்
(B) நூறுபில்லியன்
(C) பத்தாயிரம்
(D) கோடி
(E) விடை தெரியவில்லை

48. மூளை எங்கிருந்து முளைக்கிறது?

(A) தலையில்
(B) குருதியில்
(C) முதுகுதண்டில்
(D) நியூரான்களில்
(E) விடை தெரியவில்லை

49. மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு எவ்வளவு குருதி தேவைப்படுகிறது?

(A) டிரில்லியன் மி.லி.
(B) 100 மி.லி.
(C) 1000 மி.லி.
(D) 800 மி.லி.
(E) விடை தெரியவில்லை

50. நம் உடலின் அசைவுகளைக் கட்டுப்படுத்துவது எது?

(A) உள்மூளை
(B) சிறுமூளை
(C) நடுமூளை
(D) பின்மூளை
(E) விடை தெரியவில்லை

51. சேர்த்தெழுதுக :

இவை + எல்லாம்

(A) இவை எல்லாம்
(B) இவையெல்லாம்
(C) இவயெல்லாம்
(D) இதுயெல்லாம்
(E) விடை தெரியவில்லை

52. என்றென்றும் – பிரித்தெழுதுக.

(A) என் + றென்றும்
(B) என்று + என்றும்
(C) என்றும் + என்றும்
(D) என் + என்றும்
(E) விடை தெரியவில்லை

53. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) தாம்இனி
(B) தாம்மினி
(C) தாமினி
(D) தாமனி
(E) விடை தெரியவில்லை

54. இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) இன்றுஆகி
(B) இன்றிஆகி
(C) இன்றாகி
(D) இன்றாஆகி
(E) விடை தெரியவில்லை

55. 'புரவலர்' என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

(A) இறப்பவர்
(B) கொடுப்பவர்
(C) இரவலர்
(D) இரவுக்காவலர்
(E) விடை தெரியவில்லை

56. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(A) கிழக்கு – கொண்டல்
(B) மேற்கு – கோடை
(C) வடக்கு – குணக்கு
(D) தெற்கு – தென்றல்
(E) விடை தெரியவில்லை

57. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக –

ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பருவத்தில் அல்லாததை கண்டறிக.

(A) காப்பு
(B) செங்கீரை
(C) அம்புலி
(D) கழங்கு
(E) விடை தெரியவில்லை

58. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக

பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குப் பொருந்தாத பருவத்தைக் கண்டறிக.

(A) கழங்கு
(B) அம்மானை
(C) சிறு தேர்
(D) ஊசல்
(E) விடை தெரியவில்லை

59. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) ஆரி – அருமை
(B) இறடி – திணை
(C) அல்கி – தங்கி
(D) படுகர் – மேடு
(E) விடை தெரியவில்லை

60. சந்திப்பிழையற்ற தொடரை அறிக.

(A) நெகிழிபையை புறக்கணிப்போம்;நெடுநாள் வாழ்வோம்.

(B) நெகிழிப்பையை புறகணிப்போம்;நெடுநாள் வாழ்வோம்.

(C) நெகிழிபையைப் புறக்கணிப்போம்;நெடுநாள் வாழ்வோம்.

(D) நெகிழிப்பையைப் புறக்கணிப்போம்;நெடுநாள் வாழ்வோம்.

(E) விடை தெரியவில்லை

61. மரபுப் பிழையற்ற காய்களின் இளமைப் பெயர் காண்க.

(A) வாழைக்காய்

(B) கத்தரிப்பிஞ்சு

(C) மாம்பிஞ்சு

(D) அவரைக்காய்

(E) விடை தெரியவில்லை

62. மரபு வழுவை காண்க.

(A) மயில் அகவும்

(B) குயில் கத்தும்

(C) கோழி கொக்கரிக்கும்

(D) கிளி கீச்சிடும்

(E) விடை தெரியவில்லை

63. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுது :

(A) மயில் அகவும்

(B) காகம் கத்தும்

(C) கோழி கூவும்

(D) புறா குழறும்

(E) விடை தெரியவில்லை

64. சந்திப் பிழையை நீக்குக :

(A) உலகப் பெரும் புகழைப் பெற்றுத்தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள்

(B) உலக பெரும் புகழைப் பெற்று தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள்

(C) உலக பெரும் புகழை பெற்று தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள்

(D) உலகப் பெரும் புகழை பெற்றுத்தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள்

(E) விடை தெரியவில்லை

65. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்வு செய்க :

உண்டாக்குதல்

(A) விலை
(B) விளை
(C) விழை
(D) விடை
(E) விடை தெரியவில்லை

66. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

பார்

(A) உலகம், கடல்
(B) உலகம், மேதினி
(C) கடல், பார்த்தல்
(D) ஆர்கலி, புவனம்
(E) விடை தெரியவில்லை

67. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

சொல்லுதல்

(A) மொழிதல், வாசித்தல்
(B) செப்புதல், கூறல்
(C) உரைத்தல், கேட்டல்
(D) விளம்புதல், கவனித்தல்
(E) விடை தெரியவில்லை

68. "உண்" என்னும் வேர்ச் சொல்லின் பதம் அறிக.

(A) கற்பனை
(B) உண்டாள்
(C) கடித்தான்
(D) சிரிப்பு
(E) விடை தெரியவில்லை

69. "ஆடினான்" – வேர்ச் சொல்லைத் தருக.

(A) போ
(B) சிரி
(C) ஓடு
(D) ஆடு
(E) விடை தெரியவில்லை

70. சரியான அகர வரிசையை எழுதுக :

(A) கரம், கானகம், கீற்று, கொண்டை, கோட்டை
(B) கொண்டை, கோட்டை, கானகம், கரம், கீற்று
(C) கோட்டை, கரம், கானகம், கீற்று, கொண்டை
(D) கரம், கொண்டை, கோட்டை, கீற்று, கானகம்
(E) விடை தெரியவில்லை

71. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

(A) வகுப்பு, வானம், விழி, வெற்றி, வேள்வி
(B) விழி, வெற்றி, வேள்வி, வகுப்பு, வானம்
(C) வானம், விழி, வெற்றி, வேள்வி, வகுப்பு
(D) வெற்றி, வேள்வி, வகுப்பு, வானம், விழி
(E) விடை தெரியவில்லை

72. அகர வரிசையில் எழுதுக :

வணிகம், துறைமுகம், பொருள்கள், முதலீடு

(A) துறைமுகம், பொருள்கள், முதலீடு, வணிகம்
(B) பொருள்கள், வணிகம், முதலீடு, துறைமுகம்
(C) முதலீடு, பொருள்கள், வணிகம், துறைமுகம்
(D) துறைமுகம், வணிகம், பொருள்கள், முதலீடு
(E) விடை தெரியவில்லை

73. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படி எழுதுக :

சுத்தி, சிற்பம், சொட்டு, சங்கு

(A) சிற்பம், சுத்தி, சங்கு, சொட்டு
(B) சொட்டு, சங்கு, சுத்தி, சிற்பம்
(C) சங்கு, சிற்பம், சுத்தி, சொட்டு
(D) சுத்தி, சங்கு, சொட்டு, சிற்பம்
(E) விடை தெரியவில்லை

74. விடை வகைகள் 'கால் பந்து விளையாடுவாயா?' என்ற வினாவிற்குக் 'கைப்பந்து விளையாடுவேன்' என்பது எவ்வகை விடை?

(A) இனமொழி விடை
(B) நேர் விடை
(C) மறை விடை
(D) வினாவெதிர் வினாதல் விடை
(E) விடை தெரியவில்லை

75. விடைக்கேற்ற வினாவைத் தேர்க. ''மன்னுஞ் சிலம்பே ! மணிமேகலை வடிவே !''

(A) காப்பியங்கள் எத்தனை?
(B) ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
(C) ஐஞ்சிறுகாப்பியங்கள் யாவை?
(D) இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுவது எது?
(E) விடை தெரியவில்லை

76. 'என்னுடன் ஊருக்கு வருவாயா? என்ற வினாவிற்கு' வராமல் இருப்பேனா? என்று கூறுவது எவ்வகை விடை?

(A) உற்றது உரைத்தல் விடை
(B) உறுவது கூறல் விடை
(C) வினா எதிர் வினாதல் விடை
(D) இன மொழி விடை
(E) விடை தெரியவில்லை

77. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.
"பள்ளிக்கு புத்தகங்கள் வருவித்தார்".

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

78. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.
"வீடு கட்டியாயிற்று".

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

79. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிக. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Creator | 1. | குகை ஓவியங்கள் |
| (b) | Artist | 2. | படைப்பாளர் |
| (c) | Cartoon | 3. | கலைஞர் |
| (d) | Cave paintings | 4. | கருத்துப்படம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

80. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக :
விஷம்

(A) விடம்
(B) நஞ்சு
(C) அமுது
(D) இனிப்பு
(E) விடை தெரியவில்லை

81. இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து சிதைந்து வழங்கும் சொல்

(A) குடந்தை
(B) நீலகிரி
(C) மதுரை
(D) திருச்சி
(E) விடை தெரியவில்லை

82. கீழ்க்காணும் ஊர் பெயர்களில் தவறான மரூஉவை எழுதுக.

(A) மன்னார் – மன்னார்குடி
(B) கோவை – கோயம்புத்தூர்
(C) அரிவை – அரியலூர்
(D) கும்பை – கும்பகோணம்
(E) விடை தெரியவில்லை

83. சரியான சொல் எது?

கோழி – என்பதன் இளமைப் பெயர் என்ன?

(A) குட்டி
(B) குருளை
(C) குஞ்சு
(D) பிள்ளை
(E) விடை தெரியவில்லை

84. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்

நாவாய் என்பதன் சரியான சொல்

(A) இறை
(B) நிலவு
(C) தலைவன்
(D) படகு
(E) விடை தெரியவில்லை

85. பொருத்தமான காலத்தைச் சுட்டுக.

மகாகவி சுப்ரமணிய பாரதியார், 'நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா' என்று பாராட்டப் பெற்றவர்

(A) இறந்தகாலம்
(B) நிகழ்காலம்
(C) எதிர்காலம்
(D) வருங்காலம்
(E) விடை தெரியவில்லை

86. பொருத்தமான காலம் அமைத்தல் :

சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) கண்ணன் வந்தான் - இறந்தகாலம்
(B) கண்ணன் வருவான் - நிகழ்காலம்
(C) கண்ணன் வருகிறான் - எதிர்காலம்
(D) கண்ணன் வருகின்றான் - எதிர்காலம்
(E) விடை தெரியவில்லை

87. சரியான மரபுத் தொடர்களை தேர்வு செய்க

(A) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

(B) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை கட்டினர்.

(C) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை முடுக்கினர்.

(D) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

(E) விடை தெரியவில்லை

88. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (கவிழும்)

(A) மலைமுகட்டில் மேகம் ——————

(B) காலை ஒளியினில் மலரிதழ் ——————

(C) சோலைப் பூவினில் வண்டினம் ——————

(D) இயற்கையின் இன்பம் ——————

(E) விடை தெரியவில்லை

89. இரு பொருள் தரும் இணையைத் தேர்ந்தெடு.

நகை

(A) பொன்னகை, அணிகலன்

(B) புன்னகை, சிரிப்பு

(C) நகைப்பு, உவகை

(D) புன்னகை, பொன்னகை

(E) விடை தெரியவில்லை

90. இரு பொருள் தரும் இணையைத் தேர்ந்தெடு.

செய்

(A) நன்றேசெய், இன்றேசெய்

(B) நன்செய், புன்செய்

(C) செயலைச் செய், வயல் நிலம்

(D) நஞ்சை நிலம், புஞ்சை நிலம்

(E) விடை தெரியவில்லை

91. கலைச்சொல் அறிதல்

Lexicon சரியான கலைச் சொல்லை கண்டுபிடி.

(A) அகராதி
(B) சதுரகராதி
(C) பேரகராதி
(D) தமிழகராதி
(E) விடை தெரியவில்லை

92. சரியான கலைச்சொல் அறிதல் :

| | | | |
|---|---|---|---|
| (a) | Moral | 1. | குழந்தைத் தொழிலாளர் |
| (b) | Guidance | 2. | ஒழுக்கம் |
| (c) | Discipline | 3. | நீதி |
| (d) | Child labour | 4. | வழிகாட்டுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

93. மரபுப் பிழைகள் :

புலி —————— சரியான சொல்.

(A) குட்டி
(B) பறழ்
(C) குருளை
(D) கன்று
(E) விடை தெரியவில்லை

94. 'அவசரக்குடுக்கை' – சொல்லின் பொருள் தருக.

(A) எண்ணிச் செயல்படுதல்
(B) எண்ணித் துணிதல்
(C) எண்ணிச் செயல்படாமை
(D) விரைந்து செயல்படுதல்
(E) விடை தெரியவில்லை

95. சொற்களின் கூட்டுப் பெயர்கள் – சரியானதைத் தேர்ந்தெடு.
கம்பு

(A) கம்பு தோட்டம்
(B) கம்பங் கொல்லை
(C) கம்பங் குவியல்
(D) கம்பந் தோட்டம்
(E) விடை தெரியவில்லை

96. சரியான தொடரைத் தேர்ந்தெடு.
பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் தொடர்

(A) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தல்.
(B) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
(C) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
(D) பட்டிமன்றம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.
(E) விடை தெரியவில்லை

97. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) வல்லினம் இடங்கள் மிகும், மிகா அறிந்து பயன்படுத்த வேண்டும்.
(B) மிகும், மிகா இடங்கள் வல்லினம் அறிந்து பயன்படுத்த வேண்டும்.
(C) வல்லினம் மிகும் இடங்கள், மிகா இடங்கள் அறிந்து பயன்படுத்த வேண்டும்.
(D) பயன்படுத்த வேண்டும் வல்லினம் மிகும் இடங்கள், மிகா இடங்கள்.
(E) விடை தெரியவில்லை

98. பொருத்துக.

| சொல் | | பொருள் | |
|---|---|---|---|
| (a) | தேசம் | 1. | வழி |
| (b) | நெறி | 2. | நாடு |
| (c) | மாசற | 3. | அறிஞர்கள் |
| (d) | மேதைகள் | 4. | குற்றம் இல்லாமல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

99. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

(A) பறவைகள் கண்டம் விட்டு கண்டம் பறக்கின்றன.

(B) பறவைகள் கண்டம் விட்டு கண்டம் பறக்கின்றார்கள்.

(C) பறவைகள் கண்டம் விட்டு கண்டம் பறக்கின்றது.

(D) பறவைகள் கண்டம் விட்டு கண்டம் பறக்கிறார்.

(E) விடை தெரியவில்லை

100. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

(A) மாணவர்கள் வியந்து நிற்கின்றான்.

(B) மாணவர்கள் வியந்து நிற்கின்றன.

(C) மாணவர்கள் வியந்து நிற்கின்றது.

(D) மாணவர்கள் வியந்து நிற்கின்றனர்.

(E) விடை தெரியவில்லை

## பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

**வினாக்கள் : 101–200** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 101–200** **Total Marks : 150**

101. The first stage in the development of a concept is
(A) Reading
(B) Questioning
(C) Sensory exploration
(D) Reasoning
(E) Answer not known

கருத்து வளர்ச்சியின் முதல் நிலை
(A) வாசித்தல்
(B) வினா கேட்டல்
(C) புலன் அகழ்வாராய்ச்சி
(D) காரணம் காணல்
(E) விடை தெரியவில்லை

102. The UN conference of Environment and development is popularly known as ————.
(A) Montreal protocol
(B) Basel conference
(C) Kyoto protocol
(D) Earth summit
(E) Answer not known

சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான ஐ.நா. மாநாடு பிரபலமாக ———— என அழைக்கப்படுகிறது.
(A) மான்ட்ரியல் நெறிமுறை
(B) பேசல் மாநாடு
(C) கியோட்டோ நெறிமுறை
(D) பூமி உச்சி மாநாடு
(E) விடை தெரியவில்லை

103. The Sanyasi Andolan was the earliest uprising against British rule. It broke out in

(A) Madras (B) Delhi

(C) Kashmir (D) Bengal

(E) Answer not known

ஆங்கில ஆட்சிக்கு எதிராக முதன் முதலில் எழுந்த சன்நியாசி அன்டோலன் கிளர்ச்சி தோன்றிய இடம்

(A) சென்னை (B) டெல்லி

(C) காஷ்மீர் (D) வங்காளம்

(E) விடை தெரியவில்லை

104. ____________ is responsible to produce desirable effects on public Revenue and expenditure; and also responsible to avoid undesirable effects on the national income, production and employment.

(A) Fiscal policy (B) Money policy

(C) Macro Economic policy (D) Fiscal and monetary policy

(E) Answer not known

__________ ஆனது பொது வருவாய் மற்றும் செலவுத் திட்டம் ஆகியவற்றில் விரும்பதக்க விளைவுகளை தருவதற்கும், தேசிய வருமானம், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் விரும்பதகாத விளைவுகளை தடுப்பதற்கும் காரணமாக உள்ளது.

(A) நிதிக்கொள்கை (B) பணக்கொள்கை

(C) பேரிய பொருளாதார கொள்கை (D) நிதி மற்றும் பணக் கொள்கை

(E) விடை தெரியவில்லை

105. How the chemical fertilizers can be avoided in agriculture?

I. Drip irrigation

II. Cultivation of oil seeds

III. Cultivation of cereals

IV. Bio-fertilisers

(A) III and IV

(B) IV only

(C) II and III

(D) All of the above

(E) Answer not known

வேளாண்மையில் எவ்வாறு வேதி உரங்களை தவிர்க்கலாம்?

I. சொட்டு நீர்ப்பாசனம்

II. எண்ணெய் வித்து சாகுபடி

III. சிறு தானிய சாகுபடி

IV. உயிர் உரங்கள்

(A) III மற்றும் IV

(B) IV மட்டும்

(C) II மற்றும் III

(D) மேற்கூறியவை அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

106. Human Development Index is constructed on the basis of

I. Life expectancy at birth

II. Standard of living

III. Educational attainments

IV. Morbidity

(A) I, II and III are correct

(B) II and III are correct

(C) III and IV are correct

(D) I, II, III and IV are correct

(E) Answer not known

மனித மேம்பாட்டுக் குறியீடு கீழ்வருவனவற்றுள் எதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது?

I. வாழ்நாள் (ஆயுட் காலம்)

II. வாழ்க்கை தரம்

III. கல்வி தகுதி

IV. நோயுற்ற தன்மை

(A) I, II மற்றும் III சரி

(B) II மற்றும் III சரி

(C) III மற்றும் IV சரி

(D) I, II, III மற்றும் IV சரி

(E) விடை தெரியவில்லை

107. The ________ principles are included in the Articles 38, 39, 41, 42 and 43 of Indian Constitution. Which are related to Directive principles of State policy?

(A) Gandhian
(B) Socialistic
(C) Liberal
(D) General
(E) Answer not known

அரசின் நெறிமுறைக் கொள்கைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, விதிகள் 38, 39, 41, 42 மற்றும் 43 ________ கொள்கையை வெளிப்படுத்துகின்றன.

(A) காந்தியவாத
(B) சமதர்ம
(C) தாராளவாத
(D) பொதுவான
(E) விடை தெரியவில்லை

108. Match List I (Party) with List II (Associate/Founder) and choose the correct answer from the codes given below :

| List I (Party) | List II (Founder/Associated with) |
|---|---|
| (a) Independent Labour Party | 1. C. Rajagopalachari |
| (b) Bharathiya Jana Sangh | 2. A.K. Gopalan |
| (c) Swatantra Party | 3. B.R. Ambedhkar |
| (d) Communist Party | 4. Deen Dayal Upadhyaya |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) Answer not known

பட்டியல் I ம் (அரசியல் கட்சி) பட்டியல் II (தலைவர்) உடன் ஒப்பிட்டு, சரியான விடையை தேர்வு செய்யவும்.

| பட்டியல் I (கட்சி) | பட்டியல் II (தலைவர்/உறுப்பினர்) |
|---|---|
| (a) சுதந்திர உழைப்பாளர் கட்சி | 1. சி. ராஜகோபாலாச்சாரி |
| (b) பாரதிய ஜன சங்கம் | 2. ஏ.கே. கோபாலன் |
| (c) சுதந்திரக் கட்சி | 3. பி.ஆர்.அம்பேத்கர் |
| (d) கம்யூனிஸ்ட் கட்சி | 4. தீன் தயால் உபாத்யாய் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

109. Who stated that "Fundamental Rights are the shield of Democracy"?

(A) Patanjali Sastri

(B) Lal Bahadur Sastri

(C) Sri Vishnu Sastri

(D) Ramakrishna Sastri

(E) Answer not known

''அடிப்படை உரிமைகள் என்பது மக்களாட்சியின் கவசம்'' எனக் கூறியவர் யார்?

(A) பதஞ்சலி சாஸ்திரி

(B) லால் பகதூர் சாஸ்திரி

(C) ஸ்ரீ விஷ்ணு சாஸ்திரி

(D) ராமகிருஷ்ண சாஸ்திரி

(E) விடை தெரியவில்லை

110. Select the word that was inserted in the 6th para of the preamble by an amendment in 1976.

(A) Socialist

(B) Secular

(C) Integrity

(D) Dignity

(E) Answer not known

முகவுரையின் 6 ம் பத்தியில் 1976 ஆம் ஆண்டு அரசியல் சாசன திருத்தல் சட்டம் மூலமாக சேர்த்த வார்த்தையை தெரிந்து எடுக்கவும்.

(A) சோசலிச/சமதர்மமான

(B) மதச்சார்பற்ற

(C) நேர்மை

(D) கண்ணியம்

(E) விடை தெரியவில்லை

111. Tulsidasa was the most prominent saint of ———— cult.

(A) Kali
(B) Rama
(C) Shiva
(D) Vaishnava
(E) Answer not known

———— வழிபாட்டில் துளசிதாசர் மிக சிறந்த துறவி.

(A) காளி
(B) இராம
(C) சிவ
(D) வைஷ்ணவ
(E) விடை தெரியவில்லை

112. Who was the author of Varadambika Parinayam?

(A) Peddanna
(B) Thirumalamba Devi
(C) Ganga Devi
(D) Krishna Devaraya
(E) Answer not known

வர்தாம்பிகா பரிணாயம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) பெத்தண்ணா
(B) திருமலாம்பா தேவி
(C) கங்கா தேவி
(D) கிருஷ்ணதேவராயர்
(E) விடை தெரியவில்லை

113. Which state was divided into "Seven waring principalities" during Akbar's reign?

(A) Bihar
(B) Bengal
(C) Gujarat
(D) Orissa
(E) Answer not known

அக்பரின் காலத்தில் எந்த மாநிலம் ஏழு போர் புரிந்துகொள்ளும் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது?

(A) பீஹார்
(B) பெங்கால்
(C) குஜராத்
(D) ஒரிஸ்ஸா
(E) விடை தெரியவில்லை

114. Regarding the Indus Valley Civilization, consider the following statement.

(1) It was predominantly a secular civilization and the religious element though present did not dominate the scene.

(2) During the period, Cotton was used for manufacturing textiles in India.

Which of the statements given above is/are correct?

(A) (1) only

(B) (2) only

(C) Both (1) and (2)

(D) Neither (1) nor (2)

(E) Answer not known

சிந்து சமவெளி நாகரிகம் பற்றிய கீழ்க்கண்ட கூற்றில் எது சரியான கூற்று? தேர்வு செய்க.

(1) இது மதச்சார்பற்ற நாகரிகம் முதன்மையானதாக காணப்பட்டது. மேலும் மதமானது ஒரு போதும் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கவில்லை.

(2) இக்காலத்தில் ஜவுளித் தொழிற்சாலை உற்பத்தியில் பருத்தி முக்கிய பங்கு வகித்தது.

(A) (1) மட்டும்

(B) (2) மட்டும்

(C) (1) மற்றும் (2) மட்டும்

(D) (1)ம் இல்லை (2)ம் இல்லை

(E) விடை தெரியவில்லை

115. The nodal agency responsible for monitoring seismic activity in and around one country is

(A) Geological survey of India

(B) Indian meteorological Dept

(C) Emergency operation centre

(D) National Disaster Management centre

(E) Answer not known

இந்திய அரசாங்கத்தின் எந்த நிறுவனம் நாட்டில் ஏற்படும் நில அதிர்வுகளை கண்காணிக்கிறது

(A) இந்திய புவியியல் ஆய்வு மையம்

(B) இந்திய வானிலை ஆய்வு மையம்

(C) அவசர கால செயல்பாட்டு மையம்

(D) தேசிய பேரிடர் மேலாண்மை மையம்

(E) விடை தெரியவில்லை

116. Name the place where the Khadar soil is found.

(A) Foot hills

(B) Piedmont plain

(C) Flood plain

(D) All the above

(E) Answer not known

காதர் வகை மண் எங்கே காணப்படுகிறது?

(A) மலை அடிவாரம்

(B) பீட்மான்ட் சமவெளி

(C) வெள்ளச் சமவெளி

(D) மேலே உள்ள அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

117. ———— is the highest peak in the state of Maharashtra.

(A) Kalsubai

(B) Kudarmukh

(C) Mahabaleshwar

(D) Harishchandra

(E) Answer not known

மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்துள்ள மிக உயரமான சிகரம்

(A) கல்சுபாய்

(B) குடர்முக்

(C) மகாபலேஸ்வர்

(D) ஹரிஷ்சந்திரா

(E) விடை தெரியவில்லை

118. What is the discovery of Japanese Isamu Akasaki who was awarded Nobel Prize for physics in the year 2014?

(A) Discovered that black hole formation is a prediction of general theory of relativity.

(B) Discoveries in theoretical cosmology

(C) Inventions in the field of laser physics

(D) Invention of blue light emitting diode

(E) Answer not known

2014 ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு, ஜப்பானிய இசாமு அகாசாகிக்கு எந்த கண்டுபிடிப்புக்காக வழங்கப்பட்டது?

(A) சார்பியல் பொதுவான கோட்பாட்டின் கணிப்பு தான் கருந்துளை உருவாக்கம் என்பதை கண்டுபிடித்தார்

(B) கோட்பாட்டு அண்டவியல் துறையில் கண்டுபிடிப்புகள்

(C) லேசர் இயற்பியல் துறையில் கண்டுபிடிப்புகள்

(D) நீல ஒளி உமிழும் டையோடு கண்டுபிடிப்பு

(E) விடை தெரியவில்லை

119. "Venkatasubbiah" of Karnataka well known personality, is a

(A) Historian
(B) Chorographer
(C) Vocalist
(D) Lexicographer
(E) Answer not known

''வெங்கட சுப்பையா'' எனும் கர்நாடகாவின் புகழ் பெற்ற ஆளுமை ஓர்

(A) வரலாற்றாசிரியர்
(B) விரிநில நூலாலர்
(C) இசை வழக்கில் வாய்ப்பாட்டாளர்
(D) சொற்களஞ்சிய ஆசிரியர்
(E) விடை தெரியவில்லை

120. From the following statement, which are correct?

(1) Italian company Sabaf manufacturers components for household cooking appliances.
(2) Cubic modular systems is from Denmark.
(3) Stan a dyne is an Indian based company.
(4) Eickhoff wind Asia Pvt.Ltd., is from Singapore

(A) (1) and (2)
(B) (2) and (3)
(C) (3) and (4)
(D) (4) only
(E) Answer not known

பின்வரும் கூற்றில் எவை சரியான கூற்று:

(1) இத்தாலி நாட்டினைச் சேர்ந்த Sabaf நிறுவனம் வீட்டு சமையல் சாதனங்களுக்கான பொருளை தயாரிக்கிறது
(2) Cubic modular systems நிறுவனம் Denmark நாட்டினை சேர்ந்தது
(3) Stan a dyne ஒரு இந்திய நாட்டை சார்ந்த நிறுவனமாகும்
(4) Eickhoff wind Asia Pvt Ltd என்ற நிறுவனம் சிங்கப்பூரை சேர்ந்தது

(A) (1) மற்றும் (2)
(B) (2) மற்றும் (3)
(C) (3) மற்றும் (4)
(D) (4) மட்டும்
(E) விடை தெரியவில்லை

121. A sudden change of a gene or chromosome from one form to another is called

(A) Deletion

(B) Duplication

(C) Mutation

(D) Inversion

(E) Answer not known

மரபணுக்கள் மற்றும் குரோமோசோம்களில் ஏற்படும் திடீர் மாற்றம் அழைக்கப்படுவது

(A) இழத்தல்

(B) பன்மடங்காதல்

(C) சடுதி மாற்றம்

(D) தலைகீழாதல்

(E) விடை தெரியவில்லை

122. Where Khod Mals tribes live in India?

(A) Tripura

(B) Sikkim

(C) Gujarat

(D) Orissa

(E) Answer not known

இந்தியாவில் கோட் மல்ஸ் பழங்குடியினர் எங்கே வாழ்கிறார்கள்?

(A) திரிபுரா

(B) சிக்கிம்

(C) குஜராத்

(D) ஒரிசா

(E) விடை தெரியவில்லை

123. Which of the following planet rotates from East to West?

(A) Earth

(B) Jupiter

(C) Mars

(D) Venus

(E) Answer not known

கீழ்காண்பவற்றுள் எந்த கிரகம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சுற்றும்?

(A) பூமி

(B) வியாழன்

(C) செவ்வாய்

(D) வெள்ளி

(E) விடை தெரியவில்லை

124. Learning of science mainly helps a learner to develop

(A) Scientific attitude of mind

(B) New ideas

(C) Experimentation skills

(D) Positive attitude towards life

(E) Answer not known

அறிவியலை கற்பதால் கற்பவர் வளர்த்துக் கொள்ளுவது

(A) மனதின் அறிவியல் அணுகுமுறை

(B) புதிய கருத்துக்கள்

(C) பரிசோதனை திறன்

(D) வாழ்க்கையை குறித்த நேர்மறையான அணுகுமுறை

(E) விடை தெரியவில்லை

125. What is the eleventh Fibonacci number?

(A) 55

(B) 77

(C) 89

(D) 144

(E) Answer not known

பதினோறாவது பிபனோசி எண் என்ன?

(A) 55

(B) 77

(C) 89

(D) 144

(E) விடை தெரியவில்லை

126. If AT = 20, BAT = 40 then CAT will be equal to

(A) 30

(B) 50

(C) 60

(D) 70

(E) Answer not known

AT = 20 மற்றும் BAT = 40 எனில் CAT = ?

(A) 30


(B) 50

(C) 60

(D) 70

(E) விடை தெரியவில்லை

127. Find the missing number.




(A) 40


(B) 60

(C) 64

(D) 74

(E) Answer not known

விடுபட்ட எண்ணைக் காண்க.




(A) 40

(B) 60

(C) 64

(D) 74

(E) விடை தெரியவில்லை

128. A can do a work in 15 days and B in 20 days. If they work on it together for 4 days, then the fraction of the work that is left is:

(A) $\frac{1}{4}$

(B) $\frac{1}{10}$

(C) $\frac{7}{15}$

(D) $\frac{8}{15}$

(E) Answer not known

A ஒரு வேலையை 15 நாட்களில் செய்வார். B அதே வேலையை 20 நாட்களில் செய்வார். அவ்வேலையை A, B இருவரும் சேர்ந்து 4 நாட்கள் முடித்தபின் மீதமுள்ள வேலையின் பின்னம்

(A) $\frac{1}{4}$

(B) $\frac{1}{10}$

(C) $\frac{7}{15}$

(D) $\frac{8}{15}$

(E) விடை தெரியவில்லை

129. The radius of a spherical balloon increases from 7 cm to 14 cm as air is being pumped into it. Find the ratio of volumes of the balloon in the two cases.

(A) 1 : 2
(B) 1 : 4
(C) 1 : 8
(D) 7 : 14
(E) Answer not known

7 செ.மீ ஆரம் கொண்ட கோள வடிவ பலூனில் காற்று செலுத்தப்படும்போது அதன் ஆரம் 14 செ.மீ ஆக அதிகரித்தால், அவ்விரு நிலைகளில் பலூனின் கன அளவுகளின் விகிதத்தைக் காண்க.

(A) 1 : 2
(B) 1 : 4
(C) 1 : 8
(D) 7 : 14
(E) விடை தெரியவில்லை

130. The population of a village increases by 10% every year. If the present population is 6000, what will be the population of the village after 3 years?

(A) 7966
(B) 7956
(C) 7936
(D) 7986
(E) Answer not known

ஒரு கிராமத்தின் மக்கள் தொகை ஒவ்வொரு ஆண்டும் 10% அதிகரிக்கிறது. அதன் இப்போதைய மக்கள் தொகை 6000 எனில் 3 ஆண்டுகளுக்கு பிறகு அக்கிராமத்தின் மக்கள் தொகை என்னவாக இருக்கும்?

(A) 7966
(B) 7956
(C) 7936
(D) 7986
(E) விடை தெரியவில்லை

131. Basha borrowed Rs. 8,500 from a bank at a particular rate of simple interest. After 3 years he paid Rs. 11,050 to settle his debt. At what rate of interest he borrowed the money?

(A) 10% (B) 5%

(C) 20% (D) 15%

(E) Answer not known

பாட்ஷா என்பவர் ஒரு வங்கியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் ரூ. 8,500 ஐ கடனாக பெற்றார். மூன்று ஆண்டுகள் கழித்து அவர் ரூ. 11,050 செலுத்தி கடனை அடைத்தார் எனில் வட்டி வீதம்

(A) 10% (B) 5%

(C) 20% (D) 15%

(E) விடை தெரியவில்லை

132. Arvind borrowed a sum of Rs. 8,000 from Akash at 7%. per annum. Find the amount to be paid at the end of 2 years at simple interest.

(A) Rs. 1,120

(B) Rs. 1,210

(C) Rs. 9,120

(D) Rs. 9,210

(E) Answer not known

அரவிந்த் என்பவர் ரூ. 8,000 யை ஆகாஷ் என்பவரிடமிருந்து ஆண்டுக்கு 7% தனிவட்டி வீதம் கடனாக பெற்றார். இரண்டு ஆண்டுகளின் முடிவில் அரவிந்த் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையைக் காண்க.

(A) ரூ. 1,120

(B) ரூ. 1,210

(C) ரூ. 9,120

(D) ரூ. 9,210

(E) விடை தெரியவில்லை

133. Ramya earned per month Rs. 28,296. She utilized her salary in the ratio 4 : 1 : 3 for education, savings and other expenses respectively. Find her savings?

(A) Rs. 2,829.60

(B) Rs. 3,247

(C) Rs. 3,427

(D) Rs. 3,537

(E) Answer not known

ரம்யா ஒவ்வொரு மாதமும் ரூ.28,296 சம்பாதிக்கிறார். அதனை 4 : 1 : 3 என்ற விகிதத்தில் முறையே கல்வி, சேமிப்பு மற்றும் இதர செலவுகள் செய்கிறார் எனில் அவர் சேமிக்கும் தொகை எவ்வளவு?

(A) ரூ. 2829.60

(B) ரூ. 3,247

(C) ரூ. 3,427

(D) ரூ. 3,537

(E) விடை தெரியவில்லை

134. Bukka sent an embassy to ———— dynasty in China.

(A) Ming

(B) Zhou

(C) Han

(D) Sui

(E) Answer not known

புக்கர் சீனாவின் ________ வம்சத்திற்கு தூதுவரை அனுப்பினார்.

(A) மிங்

(B) சோ

(C) ஹான்

(D) சுய்

(E) விடை தெரியவில்லை

135. Find the HCF of the following

$6(2x^2 - 3x - 2)$

$8(4x^2 + 4x + 1)$

$12(2x^2 + 7x + 3)$

(A) $(2x+1)(x-2)(2x+1)(x+3)$

(B) $2(2x+1)$

(C) $4(2x+1)(x-2)$

(D) $6(2x+1)(x+3)$

(E) Answer not known

மீ.பொ.வ காண்க..

$6(2x^2 - 3x - 2)$

$8(4x^2 + 4x + 1)$

$12(2x^2 + 7x + 3)$

(A) $(2x+1)(x-2)(2x+1)(x+3)$

(B) $2(2x+1)$

(C) $4(2x+1)(x-2)$

(D) $6(2x+1)(x+3)$

(E) விடை தெரியவில்லை

136. Why the State E-mission Team (SEMT) is formulated in Tamil Nadu?

(A) To train IT professionals for economic development

(B) As part of capacity building initiatives under National e-Governance plan

(C) To provide consultancy services for industries

(D) To provide guidance to e-governance projects at the district level

(E) Answer not known

தமிழகத்தில் இ-மிஷன் குழு (SEMT) ஏன் உருவாக்கப்பட்டது?

(A) பொருளாதார வளர்ச்சிக்காக IT வல்லுநர்களைப் பயிற்றுவித்தல்

(B) தேசிய மின் ஆளுமை திட்டத்தின்படி திறன் மேம்பாட்டு முயற்சியின் ஓர் பகுதி

(C) தொழிற்சாலைகளுக்கு ஆலோசனைகள் வழங்குதல்

(D) மாவட்ட அளவிலான மின் ஆளுமைத் திட்டங்களுக்கு வழிகாட்டுதல்

(E) விடை தெரியவில்லை

137. According to the (SDG India Index) report of 2019 of NITI Aayog, Tamil nadu is placed ———— in the sustainable Development Goals India Index?

(A) First

(B) Fourth

(C) Third

(D) Sixth

(E) Answer not known

நிதி ஆயோக்-ன் அறிக்கையின் படி தமிழ்நாட்டின் நிலையான வளர்ச்சி இலக்கு 2019 குறியிடானது மாநிலங்களின் வரிசையில் ________ இடத்தில் உள்ளது.

(A) முதலாவது

(B) நான்காவது

(C) மூன்றாவது

(D) ஆறாவது

(E) விடை தெரியவில்லை

138. Name of the scheme introduced for the improvement of village habitation in Tamil nadu?

(A) Self help scheme

(B) Thai scheme

(C) Green scheme

(D) Annai scheme

(E) Answer not known

தமிழ்நாட்டில் குக்கிராமங்களின் மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் பெயர் என்ன?

(A) சுய உதவித் திட்டம்

(B) தாய் திட்டம்

(C) பசுமை திட்டம்

(D) அன்னை திட்டம்

(E) விடை தெரியவில்லை

139. Which committee recommended the 27% reservation of the OBC in the government jobs in 1991?

(A) Balwant Rai Mehta Committee

(B) Bindeshwari Prasad Mandal Committee

(C) Ashok Mehta Committee

(D) None of these

(E) Answer not known

அரசாங்க வேலைகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீட்டை சிபாரிசு செய்த கமிட்டி குழு எது?

(A) பல்வந்த் ராய் கமிட்டி

(B) பிந்தேஷ்வரி பிரசாத் மண்டல் கமிட்டி

(C) அசோக் மேத்தா கமிட்டி

(D) இதில் எதுவும் இல்லை

(E) விடை தெரியவில்லை

140. The south Indian Liberal Federation was renamed as ————

(A) Chipko movement

(B) Justice party

(C) Dravidian party

(D) Self Respect movement

(E) Answer not known

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பிற்காலத்தில் கீழ்கண்ட பெயரில் அறியப்பட்டது.

(A) சிப்கோ இயக்கம்

(B) நீதிக் கட்சி

(C) திராவிட இயக்கம்

(D) சுய மரியாதை இயக்கம்

(E) விடை தெரியவில்லை

141. Active Learning Methodology (ALM) is being implemented at the ———— in Tamilnadu

(A) Primary school

(B) Middle school

(C) High school

(D) Higher secondary school

(E) Answer not known

தமிழ்நாட்டில் உள்ள ———— செயலியல் கற்றல் முறை (ALM) செயல்படுத்தப்படுகிறது.

(A) தொடக்ககல்வி பள்ளிகளில்

(B) நடுநிலைப் பள்ளிகளில்

(C) உயர்நிலைப் பள்ளிகளில்

(D) மேல்நிலைப் பள்ளிகளில்

(E) விடை தெரியவில்லை

142. Which Gupta ruler issued Allahabad stone Pillar Inscription?

(A) Chandragupta I

(B) Samudragupta

(C) Kumaragupta I

(D) Skandagupta

(E) Answer not known

எந்த குப்த வம்ச ஆட்சியாளர் அலகாபாத் கல் தூண் கல்வெட்டை வெளியிட்டார்?

(A) முதலாம் சந்திரகுப்தர்

(B) சமுத்திரகுப்தர்

(C) முதலாம் குமாரகுப்தர்

(D) ஸ்கந்த குப்தர்

(E) விடை தெரியவில்லை

143. Match :

| | | | |
|---|---|---|---|
| (a) | Ammu Swaminathan | 1. | Youth League |
| (b) | Rukmani Lakshmapathy | 2. | Constituent Assembly |
| (c) | Krishnammal Jaganathan | 3. | Neil Statue Satyagraha |
| (d) | Anjali Ammal | 4. | Bhoodan Movement |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அம்மு ஸ்வாமிநாதன் | 1. | இளைஞர் கூட்டிணைவு |
| (b) | ருக்மணி லக்குமிபதி | 2. | அரசியல் அமைப்புச்சபை |
| (c) | கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் | 3. | நீல் சிலை சத்யாகிரகம் |
| (d) | அஞ்சலி அம்மாள் | 4. | பூதான இயக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

144. 'Alive was he yesterday, but not today.
It is a marvel in the world's way'. What is the meaning of this Thirukural?
(A) Everything is permanent in this world.
(B) Nothing is permanent in this world.
(C) Birth and Death is natural.
(D) The world is a proud place
(E) Answer not known

"நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்துஇவ் வுலகு" என்ற குறள் கூறும் கருத்து யாது?
(A) உலகம் நிலைத்தது
(B) உலகம் நிலையில்லாதது
(C) பிறப்பும் இறப்பும் இயற்கை
(D) உலகம் பெருமையுடையது
(E) விடை தெரியவில்லை

145. Whose quality is it to have courage, a liberal hand, wisdom and energy?
(A) Quality of a King
(B) Quality of a Minister
(C) Quality of a Soldier
(D) Quality of a Poet
(E) Answer not known

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கு குணங்களும் இடைவிடாது நிற்றல் யாரது இயல்பு?
(A) அரசனது இயல்பு
(B) அமைச்சனது இயல்பு
(C) வீரனது இயல்பு
(D) புலவரது இயல்பு
(E) விடை தெரியவில்லை

146. Thiruvalluvar refers to the last stage of the uneducated?
(A) Noolgalai Katru Adhigam Peasupaver (who read texts and talk too much)
(B) Noolgalai Katru Peasa Maruppavar (Refusal to read texts)
(C) Noolgalai Katru Kondiruppavar (one who reads the text)
(D) Noolgalai Katru Avaikku Anjubavar (Read the books and Afraid to speak in the congregation)
(E) Answer not known

'கல்லாதவரின் கடை' என்று வள்ளுவர் யாரைக் கூறுகிறார்?
(A) நூல்களைக் கற்று அதிகம் பேசுபவர்
(B) நூல்களைக் கற்று பேச மறுப்பவர்
(C) நூல்களைக் கற்றுக் கொண்டிருப்பவர்
(D) நூல்களைக் கற்று அவைக்கு அஞ்சுபவர்
(E) விடை தெரியவில்லை

147. Identify the first Tamil Text which states that the globe is spherical in shape?

(A) Thirukkural
(B) Nalladiyar
(C) Yeelathi
(D) Mudhumozhi Kanchi
(E) Answer not known

உலகம் உருண்டை வடிவமானது எனக் கூறிய முதல் தமிழ்நூல் எது?

(A) திருக்குறள்
(B) நாலடியார்
(C) ஏலாதி
(D) முதுமொழிக்காஞ்சி
(E) விடை தெரியவில்லை

148. Which of the Ettuthogai book contains ample historical incidents?

(A) Agananooru
(B) Kalithogai
(C) Natrinai
(D) Kurunthogai
(E) Answer not known

வரலாற்றுச் செய்திகள் மிகுதியாகக் கொண்ட எட்டுத்தொகை நூல் எது?

(A) அகநானூறு
(B) கலித்தொகை
(C) நற்றிணை
(D) குறுந்தொகை
(E) விடை தெரியவில்லை

149. Which one of the following Ettuthokai books consists of more number of songs?

(A) Nattrinai
(B) Kurunthokai
(C) Kalithokai
(D) Ainkurunooru
(E) Answer not known

பின்வரும் எட்டுத்தொகை நூல்களுள் அதிகமான பாடல்களைக் கொண்ட நூல் எது?

(A) நற்றிணை
(B) குறுந்தொகை
(C) கலித்தொகை
(D) ஐங்குறுநூறு
(E) விடை தெரியவில்லை

150. The founder of Deva Samaj in 1887 was

(A) Swamy Dhayananda Saraswathi

(B) Shiv Narain Agnihotri

(C) Athmarao Pandurang

(D) Kesavachandra Sen

(E) Answer not known

1887 –ல் தேவ சமாஜத்தை தோற்றுவித்தவர்

(A) சுவாமி தயானந்த சரஸ்வதி

(B) சிவ் நாராயண அக்னி ஹோத்திரி

(C) ஆத்மராவ் பாண்டுரங்

(D) கேசவசந்திர சென்

(E) விடை தெரியவில்லை

151. In which congress session did Mohammad Ali Jinnah moved a resolution condemning the system of communal representation?

(A) 1910
(B) 1911
(C) 1912
(D) 1913
(E) Answer not known

எந்த காங்கிரஸ் மாநாட்டில் வகுப்பு வாத பிரதிநிதித்துவம் தவறு என்ற மசோதாவை முகமது அலி ஜின்னா கொண்டு வந்தார்?

(A) 1910
(B) 1911
(C) 1912
(D) 1913
(E) விடை தெரியவில்லை

152. Who was the founder of "All India Scheduled Castes Federation"?

(A) Babu Jaga Jeevan Ram

(B) B.R. Ambedkar

(C) Y.P. Chavan

(D) S.B. Chavan

(E) Answer not known

அனைத்திந்திய பட்டியல் இனத்தினரின் கூட்டமைப்பினை நிறுவியவர் யார்?

(A) பாபு ஜெகஜீவன் ராம்

(B) B.R. அம்பேத்கர்

(C) Y.P. சவான்

(D) S.B. சவான்

(E) விடை தெரியவில்லை

153. Who among the following was regarded as "Moksha Guru" by Bal Gangadar Tilak?

(A) Anna Sahib

(B) V.D. Savarkar

(C) M.G. Ranade

(D) W.C. Banerjee

(E) Answer not known

கீழ்கண்டவர்களில் யாரை பாலகங்காதர திலகர் "மோட்ச குரு" வாக கருதினார்?

(A) அன்னாசாகிப்

(B) V.D. சவார்க்கர்

(C) M.G. ராணடே

(D) W.C. பாணர்ஜி

(E) விடை தெரியவில்லை

154. Out of various stages in demographic transition theory the stage that exhibits "Low birth rate and low death rate" Corresponds to

(A) Rapid increase in population
(B) Stable or slow increase in population
(C) Rapid decrease in population
(D) Population explosion
(E) Answer not known

மக்கட் தொகையியல் மாற்றக் கோட்பாட்டின் பல்வேறு கட்டத்தில் "தாழ்ந்த பிறப்பு வீதம் மற்றும் தாழ்ந்த இறப்பு வீதம்" உடைய கட்டத்தில் பின்வரும் எந்த நிலையை ஒத்திருக்கிறது.

(A) மக்கள் தொகையில் விரைவான அதிகரிப்பு
(B) மக்கள் தொகையில் நிலையான அல்லது மெதுவான அதிகரிப்பு
(C) மக்கள் தொகையில் விரைவான குறைவு
(D) மக்கள் தொகை வெடிப்பு
(E) விடை தெரியவில்லை

155. The Government of India launched a time bound plan in 2005 called Bharath Nirman Yojana. Which one of below is not connected with Bharat Nirman Yojana?

(A) Rural connectivity
(B) Rural housing
(C) Self help group
(D) Rural water supply
(E) Answer not known

இந்திய அரசு 2005 ஆம் ஆண்டில் பாரத் நிர்மான் என்று அழைக்கப்படும் ஒரு கால எல்லைக்குட்பட்ட திட்டத்தை அறிமுகப்படுத்தியது. கீழ்கண்டவற்றில் பாரத் நிர்மான் திட்டத்துடன் தொடர்பில்லாதது எது?

(A) கிராமப்புற இணைப்பு
(B) கிராமப்புற வீட்டு வசதி
(C) சுய உதவி குழு
(D) கிராமப்புற நீர் அளிப்பு
(E) விடை தெரியவில்லை

156. Which of the following subject comes under Central Government?

(A) Banking
(B) Agriculture
(C) Prison
(D) Public health
(E) Answer not known

பின்வருவனவற்றில் எது மத்திய அரசின் கீழ் வருகிறது?

(A) வங்கி
(B) விவசாயம்
(C) சிறை
(D) பொது சுகாதாரம்
(E) விடை தெரியவில்லை

157. Reverse Repo Rate (RRR) means :

1. The rate at which the RBI is willing to lend to commercial banks
2. The rate at which the RBI is willing to borrow from the commercial banks
3. Bank rate policy
4. The variable portfolio ceiling

(A) 1
(B) 3
(C) 2
(D) 4
(E) Answer not known

மீள் ரெப்போ விகிதம் என்பது :

1. வணிக வங்கிகளுக்கு மைய வங்கி குறுகிய கால கடன் வழங்கும் பொழுது விதிக்கும் வட்டி விகிதம்
2. வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்கான இந்திய ரிசர்வ் வங்கி கொடுக்க விரும்பும் வட்டி விகிதம்
3. வங்கி விகிதக் கொள்கை
4. மாறும் தொகுப்பு வரையறை

(A) 1
(B) 3
(C) 2
(D) 4
(E) விடை தெரியவில்லை

158. Which mission endorsed the plan for a Central Government with limited powers and relatively strong provinces having considerable degree of autonomy with all the residuary powers?

(A) 1946, Cabinet Mission

(B) 1942, Cripps Mission

(C) Constituent Assembly 1949

(D) Simon Commission, 1928

(E) Answer not known

பின்வரும் எந்த குழு மைய அரசு வலிமை குறைவாகவும் மாநில அரசுகள் அதிகாரமான சுதந்திரத்தோடு செயல்படுவதற்கு வித்திட்டது?

(A) 1946, கேபினட் பணிக்குழு

(B) 1942, கிரிப்ஸ் பணிக்குழு

(C) அரசியல் சாசன அமைப்புக்குழு, 1949

(D) சைமன் ஆணையம், 1928

(E) விடை தெரியவில்லை

159. Who among the following controls the Secretariat of the Loksabha and Rajya Sabha, respectively?

(A) President and Vice President respectively

(B) Prime Minister and Union Parliamentary Affairs Minister

(C) Prime Minister and Home Minister

(D) Speaker and Chairman respectively

(E) Answer not known

பின்வரும் பொறுப்பாளர்களுள் யார் கீழ் அவை மற்றும் மேலவையின் செயலகத்தை கட்டுப்படுத்தி, தலைமையேற்று வழி நடத்தி செல்கின்றனர்?

(A) ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி

(B) பிரதம மந்திரி மற்றும் மத்திய பாராளுமன்றத்துறை அமைச்சர்

(C) பிரதம மந்திரி மற்றும் உள்துறை அமைச்சர்

(D) கீழவையின் சபாநாயகர் மற்றும் மேலவையின் தலைவர் முறையாக

(E) விடை தெரியவில்லை

160. Which schedule of the Indian Constitution specifies powers, authority and responsibilities of Panchayat?

(A) Seventh schedule

(B) Sixth schedule

(C) Tenth schedule

(D) Eleventh schedule

(E) Answer not known

இந்திய அரசியலமைப்பின் எந்த அட்டவணையில் பஞ்சாயத்து முறையின் ஆற்றல், அதிகாரம் மற்றும் பொறுப்புக்களைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) ஏழாவது அட்டவணை

(B) ஆறாவது அட்டவணை

(C) பத்தாவது அட்டவணை

(D) பதினொன்றாம் அட்டவணை

(E) விடை தெரியவில்லை

161. Choose the correct order of the Vice Presidents based on the succession.

(A) K.R. Narayanan, B.D. Jatti, Zakir Hussain, B.S. Shekhawat

(B) Zakir Hussain, B.S. Shekhawat, B.D. Jatti, K.R. Narayanan

(C) Zakir Hussain, B.D. Jatti, K.R. Narayanan, B.S. Shekhawat

(D) B.S. Shekhawat, Zakir Hussain, B.D. Jatti, K.R. Narayanan

(E) Answer not known

துணை ஜனாதிபதிகளின் சரியான வரிசையை தேர்ந்தெடுக்கவும்.

(A) கே.ஆர். நாராயணன், பி.டி. ஜெட்டி, ஜாகிர் ஹுசேன், பி.எஸ். ஷெகாவட்

(B) ஜாகிர் ஹுசேன், பி.எஸ். ஷெகாவட், பி.டி. ஜெட்டி, கே.ஆர். நாராயணன்

(C) ஜாகிர் ஹுசேன், பி.டி. ஜெட்டி, கே.ஆர். நாராயணன், பி.எஸ். ஷெகாவட்

(D) பி.எஸ். ஷெகாவட், ஜாகிர் ஹுசேன், பி.டி. ஜெட்டி, கே.ஆர். நாராயணன்

(E) விடை தெரியவில்லை

162. Which amendment in 1976, inserting the word secular in the preamble of the Indian Constitution?

(A) 41 amendment

(B) 42 amendment

(C) 44 amendment

(D) 45 amendment

(E) Answer not known

1976 – ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில், 'சமயசார்பற்ற' என்ற வார்த்தை எத்தனையாவது அரசியலமைப்பு சட்டதிருத்தத்தின்படி சேர்க்கப்பட்டது?

(A) 41 வது அரசியலமைப்பு திருத்தம்

(B) 42 வது அரசியலமைப்பு திருத்தம்

(C) 44 வது அரசியலமைப்பு திருத்தம்

(D) 45 வது அரசியலமைப்பு திருத்தம்

(E) விடை தெரியவில்லை

163. The first traces of a human being in India is found in the

(A) Deccan

(B) Narmada

(C) Indo-Gangetic

(D) Chambhal

(E) Answer not known

மனிதனின் தடயங்கள் முதன் முதலில் இந்தியாவில் எங்கு கண்டெடுக்கப்பட்டன?

(A) தக்காணம்

(B) நர்மதா

(C) இந்து–கங்கை

(D) சம்பால்

(E) விடை தெரியவில்லை

164. The largest producer of green energy is

(A) Solar power

(B) Hydro power

(C) Wind power

(D) Geothermal power

(E) Answer not known

பசுமை ஆற்றலின் மிகப்பெரிய உற்பத்தியாளர்

(A) சூரிய சக்தி

(B) புனல் மின்சக்தி

(C) காற்று சக்தி

(D) புவிவெப்ப சக்தி

(E) விடை தெரியவில்லை

165. Which tree was regarded as the tree of creation and knowledge during Indus Valley civilization?

(A) Pipal Tree

(B) Mango Tree

(C) Neem Tree

(D) Tamarind Tree

(E) Answer not known

எந்த மரம் ''படைப்பு மற்றும் அறிவின் மரமாக'' சிந்து சமவெளி நாகரீக காலத்தில் கருதப்பட்டது?

(A) அரச மரம்

(B) மாமரம்

(C) வேப்ப மரம்

(D) புளியமரம்

(E) விடை தெரியவில்லை

166. Asbestosis is a chronic inflammatory condition that affects the tissue of

(A) Brain

(B) Heart

(C) Lungs

(D) Kidney

(E) Answer not known

அஸ்பெஸ்டாசிஸ் என்ற நாள்பட்ட அழற்சி நிலையால் திசுக்கள் பாதிப்படையும் உறுப்பு

(A) மூளை

(B) இதயம்

(C) நுரையீரல்

(D) சிறுநீரகம்

(E) விடை தெரியவில்லை

167. Match the following :

| | Tribe | | State |
|---|---|---|---|
| (a) | Aka | 1. | Assam |
| (b) | Ahirs | 2. | Ladakh |
| (c) | Beda | 3. | Arunachal Pradesh |
| (d) | Karbe | 4. | Uttar Pradesh |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றை பொருத்துக :

| | பழங்குடியினர் | | மாநிலம் |
|---|---|---|---|
| (a) | அகா | 1. | அஸ்ஸாம் |
| (b) | அகிர்ஸ் | 2. | லடாக் |
| (c) | பெடா | 3. | அருணாச்சல் பிரதேஷ் |
| (d) | கார்பி | 4. | உத்திரப் பிரதேஷ் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

168. International children's day celebrated in China on

(A) 21st May

(B) 1st June

(C) 31st August

(D) 1st November

(E) Answer not known

சீனாவில் சர்வதேச குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் நாள்

(A) 21 மே

(B) 1 ஜூன்

(C) 31 ஆகஸ்ட்

(D) 1 நவம்பர்

(E) விடை தெரியவில்லை

169. Arrange in descending, the top agricultural producing countries in the world?

(A) China – India – United States – Brazil

(B) China – United States – Brazil – India

(C) China – United States – India – Brazil

(D) United States – China – India – Brazil

(E) Answer not known

வேளாண்மை உற்பத்தியில் முதன்மையான நாடுகளை இறங்கு வரிசையில் தெரிந்தெடுக்க.

(A) சீனா – இந்தியா – அமெரிக்க ஐக்கிய நாடுகள் – பிரேசில்

(B) சீனா – அமெரிக்க ஐக்கிய நாடுகள் – பிரேசில் – இந்தியா

(C) சீனா – அமெரிக்க ஐக்கிய நாடுகள் – இந்தியா – பிரேசில்

(D) அமெரிக்க ஐக்கிய நாடுகள் – சீனா – இந்தியா – பிரேசில்

(E) விடை தெரியவில்லை

170. Match the following :

| Name of the party | Symbol |
|---|---|
| (a) Janata Dal (JD (U)) | 1. Plough |
| (b) Jharkhand Mukti Morcha (JMM) | 2. Ladder |
| (c) Indian Union Muslim League | 3. Bow and Arrow |
| (d) Jammu & Kashmir National Conference | 4. Arrow |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known

கீழ்கண்டவற்றை பொருத்துக :

| கட்சியின் பெயர் | சின்னம் |
|---|---|
| (a) ஜனதா தலம் (U) | 1. ஏர்கலப்பை |
| (b) ஜார்கண்ட் முக்தி மோர்சா (JMM) | 2. ஏணிப்படி |
| (c) இந்திய யூனியன் முஸ்லீம் லீக் | 3. வில்லும் அம்பும் |
| (d) ஜம்மு காஷ்மீர் மாநாட்டு கட்சி | 4. அம்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

171. "ECLGS" scheme is a

(A) Emergency Credit Line Guarantee Scheme

(B) Emergency Credit and Law Guarantee Scheme

(C) Emergency Credit and Life Guarantee Scheme

(D) Emergency Credit Loan Guarantee System

(E) Answer not known

"ECLGS" திட்டம் என்பது

(A) அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம்

(B) அவசரகாலக் கடன் மற்றும் சட்ட உத்தரவாதத் திட்டம்

(C) அவசரகாலக் கடன் மற்றும் ஆயுள் உத்தரவாதத் திட்டம்

(D) அவசரகாலக் கடன் உத்தரவாத அமைப்பு

(E) விடை தெரியவில்லை

172. What is the Vaccine given for polio?

(A) IPV (Inactivated Polio Vaccine)

(B) OPV (Oral Polio Vaccine)

(C) BCG

(D) IPV and OPV

(E) Answer not known

போலியோவிற்க்கான தடுப்பூசி என்ன?

(A) மந்தமாக்கப்பட்ட போலியோ மருந்து

(B) வாய்வழி போலியோ தடுப்பு மருந்து

(C) பிசிஜி

(D) மந்தமாக்கப்பட்ட போலியோ தடுப்பு மருந்து மற்றும் வாய்வழி போலியோ தடுப்பு மருந்து

(E) விடை தெரியவில்லை

173. The rays markedly increasing Shelf-life of fresh fruits are

(A) X rays

(B) Gamma rays

(C) Beta rays

(D) Alpha rays

(E) Answer not known

பழங்களின் கெடா நிலைக் காலத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும் கதிர்களானவை

(A) X கதிர்கள்

(B) காமா கதிர்கள்

(C) பீட்டா கதிர்கள்

(D) ஆல்பா கதிர்கள்

(E) விடை தெரியவில்லை

174. The reason for expressing audio power amplification in dB unit is

(A) our ear response

(B) easy calculation

(C) no other unit

(D) to honour Graham Bel

(E) Answer not known

ஒலி ஆற்றல் பெருக்கியின் அலகு டெசிபல் என்று குறிப்பதற்கான காரணம் என்ன?

(A) நம்முடைய செவியுணர்வு

(B) எளிதில் கணக்கிட முடியும்

(C) வேறு எந்த அலகும் இல்லை

(D) கிரகாம் பெல்-லை கவுரவிப்பதற்காக

(E) விடை தெரியவில்லை

175. Deductive reasoning enhances the speed and efficiency ———— problems.

(A) in solving

(B) in creating

(C) in initiating

(D) in imitating

(E) Answer not known

பிரச்சினைகளை ———— வேகத்தையும் திறனையும் பகுத்தறிதல் ஆய்வு திறன் மேம்படுத்துகிறது.

(A) தீர்ப்பதில்

(B) உருவாக்குவதில்

(C) துவக்க முயற்சியில்

(D) போலச் செய்வதில்

(E) விடை தெரியவில்லை

176. Find the missing number 6, 20, 56, 176,

(A) 216

(B) 316

(C) 416

(D) 516

(E) Answer not known

விடுபட்ட எண்ணைக் காண்க 6, 20, 56, 176,

(A) 216

(B) 316

(C) 416

(D) 516

(E) விடை தெரியவில்லை

177. 4 Y 3 N C & 9 B L P ★ D = ↑ M @ 2 E # 7 $ V F G 5

In the above sequence which of the following will be exactly in the middle between 9 and $?

(A) =

(B) ↑

(C) D

(D) M

(E) Answer not known

4 Y 3 N C & 9 B L P ★ D =↑ M @ 2 E # 7 $ V F G 5

மேலே உள்ள தொடரில் 9 மற்றும் $ என்ற உறுப்புகளுக்கு இடையே சரியாக நடுவில் வரும் உறுப்பைக் காண்க

(A) =

(B) ↑

(C) D

(D) M

(E) விடை தெரியவில்லை

178. How many ordered pairs of natural numbers $(a,b)$ satisfy $a + 2b = 100$?

(A) 33

(B) 49

(C) 50

(D) 99

(E) Answer not known

$a + 2b = 100$ என வருமாறு எத்தனை இயல் எண்கள் வரிசைச் ஜோடி $(a,b)$ உள்ளது.

(A) 33

(B) 49

(C) 50

(D) 99

(E) விடை தெரியவில்லை

179. A can finish a job in 3 days whereas B finishes it in 6 days. The time taken to complete the job together is ———— days

(A) 2 days

(B) $2\frac{1}{2}$ days

(C) 3 days

(D) $3\frac{1}{2}$ days

(E) Answer not known

A என்பவர் ஒரு வேலையை 3 நாள்களிலும் B என்பவர் 6 நாள்களிலும் முடிப்பார் எனில், இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அந்த வேலையை ———— நாள்களில் முடிப்பர்.

(A) 2 நாட்கள்

(B) $2\frac{1}{2}$ நாட்கள்

(C) 3 நாட்கள்

(D) $3\frac{1}{2}$ நாட்கள்

(E) விடை தெரியவில்லை

180. If 15 men take 40 days to complete a work, how long will it take if 15 more men join them to complete the same work?

(A) 30 days
(B) 40 days
(C) 25 days
(D) 20 days
(E) Answer not known

15 ஆண்கள் ஒரு வேலையை முடிக்க 40 நாட்கள் எடுத்துக் கொள்வர் எனில், அவர்களுடன் மேலும் 15 ஆண்கள் சேர்ந்தால், அதே வேலையானது முடிய எத்தனை நாள்கள் ஆகும்?

(A) 30 நாட்கள்
(B) 40 நாட்கள்
(C) 25 நாட்கள்
(D) 20 நாட்கள்
(E) விடை தெரியவில்லை

181. The perimeter of a triangular plot is 600 m. If the sides are in the ratio 5 : 12 : 13 then find the area of the plot.

(A) 11000 sq.m.
(B) 14000 sq.m.
(C) 12000 sq.m.
(D) 13000 sq.m.
(E) Answer not known

ஒரு முக்கோண வடிவிலான மனையின் சுற்றளவு 600 மீ. அதன் பக்கங்கள் 5 : 12 : 13 என்ற விகிதத்தில் உள்ளன எனில் அந்த மனையின் பரப்பு காண்க.

(A) 11000 ச.மீ.
(B) 14000 ச.மீ.
(C) 12000 ச.மீ.
(D) 13000 ச.மீ.
(E) விடை தெரியவில்லை

182. The sum which amounts to Rs. 2662 at 10% p.a. in 3 years compounded yearly is

(A) Rs. 2,000

(B) Rs. 1,800

(C) Rs. 1,500

(D) Rs. 2,500

(E) Answer not known

10% ஆண்டு வட்டியில் ஆண்டுக்கொரு முறை வட்டி கணக்கிடப்பட்டால் 3 ஆண்டுகளில் __________ என்ற அசலானது ரூ. 2,662 ஆக அதிகரிக்கும்.

(A) ரூ. 2,000

(B) ரூ. 1,800

(C) ரூ. 1,500

(D) ரூ. 2,500

(E) விடை தெரியவில்லை

183. The population of a town is increasing at the rate of 6% p.a. It was 238765 in the year 2018. The population in the year 2020 is

(A) 268376

(B) 268276

(C) 268266

(D) 268366

(E) Answer not known

ஒரு நகரத்தின் மக்கள் தொகை ஆண்டுக்கு 6% வீதம் அதிகரிக்கிறது. 2018 ஆம் ஆண்டு மக்கள் தொகை 238765 ஆக இருந்தது, 2020 ஆம் ஆண்டின் மக்கள் தொகையைக் காண்க.

(A) 268376

(B) 268276

(C) 268266

(D) 268366

(E) விடை தெரியவில்லை

184. The monthly salary of A,B and C are in the ratio 2:3:5. If C's monthly salary is Rs. 1,200 more than that of A then find B's annual salary.

(A) Rs. 24,400

(B) Rs. 24,000

(C) Rs. 14,400

(D) Rs. 14,000

(E) Answer not known

A,B மற்றும் C ன் மாத ஊதிய விகிதம் 2 : 3 : 5 C ன் மாத ஊதியம் A யின் மாத ஊதியத்தை விட ரூ. 1,200 அதிகம் எனில் B ன் ஆண்டு ஊதியம் என்ன?

(A) ரூ. 24,400

(B) ரூ. 24,000

(C) ரூ. 14,400

(D) ரூ. 14,000

(E) விடை தெரியவில்லை

185. If $\frac{2}{3}A = 75\%$ of B, then A : B is

(A) 1 : 1

(B) 9 : 8

(C) 8 : 9

(D) 10 : 11

(E) Answer not known

A ன் $\frac{2}{3}$ பங்கும் B ன் 75%-ம் சமம் எனில் A : B என்பது

(A) 1 : 1

(B) 9 : 8

(C) 8 : 9

(D) 10 : 11

(E) விடை தெரியவில்லை

186. What is the smallest 5 digit number that is exactly divisible by 72 and 108?

(A) 10072

(B) 10216

(C) 10152

(D) 10108

(E) Answer not known

72 மற்றும் 108 ஆகிய எண்களால் சரியாக வகுபடக்கூடிய மிகச்சிறிய 5 இலக்க எண்

(A) 10072

(B) 10216

(C) 10152

(D) 10108

(E) விடை தெரியவில்லை

187. What is the greatest number that will divide 62,78 and 109 leaving remainder 2, 3 and 4 respectively?

(A) 5

(B) 13

(C) 15

(D) 17

(E) Answer not known

62, 78 மற்றும் 109ஐ வகுத்து முறையே 2, 3 மற்றும் 4ஐ மீதிகளாக் கொடுக்கும் மீப்பெரு பொதுக் காரணி என்ன?

(A) 5

(B) 13

(C) 15

(D) 17

(E) விடை தெரியவில்லை

188. When 60 is subtracted from 60% of a number to give 60, then the number is

(A) 60

(B) 100

(C) 150

(D) 200

(E) Answer not known

ஓர் எண்ணின் 60% இலிருந்து 60ஐக் கழித்தால் 60 கிடைக்கும் எனில் அந்த எண் __________ ஆகும்.

(A) 60

(B) 100

(C) 150

(D) 200

(E) விடை தெரியவில்லை

189. If 10% of A is equal to 12% of B, then 15% of A is equal to what percent of B?

(A) 81%

(B) 18%

(C) 6%

(D) 3%

(E) Answer not known

A இன் 10% என்பது B இன் 12% சமம் எனில் A இன் 15%, B இன் எந்த சதவீதத்திற்கு சமம்?

(A) 81%

(B) 18%

(C) 6%

(D) 3%

(E) விடை தெரியவில்லை

190. Chennai $5^{th}$ water reservoir is being built in

(A) Poondi
(B) Thiruvallur
(C) Cholavaram
(D) Redhills
(E) Answer not known

சென்னையின் 5-வது நீர்த்தேக்கம் கட்டப்படுவது

(A) பூண்டி
(B) திருவள்ளூர்
(C) சோளாவரம்
(D) செங்குன்றம்
(E) விடை தெரியவில்லை

191. Three language formula was adopted in the education system of Tamil Nadu in the year?

(A) 1975
(B) 1965
(C) 1985
(D) 1970
(E) Answer not known

தமிழக கல்வித் திட்டத்தில் மூன்று மொழி ஏற்றுக் கொண்ட ஆண்டு

(A) 1975
(B) 1965
(C) 1985
(D) 1970
(E) விடை தெரியவில்லை

192. The programme of support to Training –cum-employment (STEP) was launched in 1987, for the welfare of

(A) Youth
(B) Women
(C) Differently abled
(D) Students
(E) Answer not known

1987ல் தொடங்கப்பட்ட, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான ஆதரவுத் திட்டம், யாருக்கான நலத்திட்டம்?

(A) இளைஞர்கள்
(B) பெண்கள்
(C) மாற்றுத்திறனாளிகள்
(D) மாணவர்கள்
(E) விடை தெரியவில்லை

193. Match List I with List II and choose the right answer :

| List I | | List II |
|---|---|---|
| (a) Cradle baby scheme | 1. | Take care of economically backward women |
| (b) Service homes | 2. | Empowerment of rural women |
| (c) "SAKHI" | 3. | Save the girl children |
| (d) Mahila Shakti Kendra | 4. | Support women affected by violence |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) Answer not known

வரிசை I ஐ வரிசை II-உடன் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்க.

| வரிசை I | | வரிசை II |
|---|---|---|
| (a) தொட்டில் குழந்தை திட்டம் | 1. | பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பெண்களை பாதுகாப்பது |
| (b) சேவை இல்லங்கள் | 2. | கிராமப்புற பெண்களுக்கு அதிகாரமளிப்பு |
| (c) சகி | 3. | பெண் குழந்தைகளை பாதுகாப்பது |
| (d) மகிளா சக்தி கேந்திரா | 4. | வன்முற்றயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

194. Consider the following statements regarding self respect marriages advocated by Periyar.

Bring out the statement which is not a part of self respect marriages.

(A) Marriage-conducted without a Brahmin priest

(B) No religious ceremony in the marriages

(C) Took place in the presence of a Government Registrar

(D) Ooth taken by the bride and bridegroom

(E) Answer not known

பெரியார் ஆதரித்த சுயமரியாதை திருமணங்கள் பற்றிய பின்வரும் சொற்றொடர்களை கவனிக்கவும்.

சுயமரியாதை திருமணத்தோடு தொடர்பில்லாத சொற்றொடரை விளக்கவும்.

(A) பிராமண புரோகிதர் இல்லாது நடத்தப்பட்டது

(B) எந்த மதச்சார்பு வழக்கங்களும் பின்பற்றப்படவில்லை

(C) அரசுப் பதிவாளர் முன்னிலையில் நடைபெற்றது

(D) மணமகன் மற்றும் மணமகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்

(E) விடை தெரியவில்லை

195. Arrange Chronologically

(i) Sadlar commission

(ii) The Raleigh Commission

(iii) University Grants Commission

(iv) Radhakrishna Commission

(A) (ii), (i), (iv), (iii)

(B) (i), (ii), (iv), (iii)

(C) (iii), (i), (ii), (iv)

(D) (ii), (i), (iii), (iv)

(E) Answer not known

காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

(i) சாட்லர் குழு

(ii) ரெலிக் குழு

(iii) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு

(iv) இராதாகிருஷ்ணன் குழு

(A) (ii), (i), (iv), (iii)

(B) (i), (ii), (iv), (iii)

(C) (iii), (i), (ii), (iv)

(D) (ii), (i), (iii), (iv)

(E) விடை தெரியவில்லை

196. Consider the following pairs :

| | | | |
|---|---|---|---|
| I. | Gopala Krishna Gokhale | – | G.A. Natesan |
| II. | Vijaya Ragavachari | – | Lala Lajpat Roi |
| III. | V.O. Chidambaram | – | Subramaniya Siva |
| IV. | T. Rengachari | – | V.S. Srinivasa Sastri |

Which of the Pair/Pairs given above is/are incorrect?

(A) I and IV only

(B) II only

(C) IV only

(D) II and III only

(E) Answer not known

கீழ்க்கண்ட இணைகளைக் கவனி :

| | | | |
|---|---|---|---|
| I. | கோபால கிருஷ்ண கோகலே | – | ஜி.ஏ. நடேசன் |
| II. | விஜய ராகவாச்சாரியார் | – | லாலா லஜ்பத் ராய் |
| III. | வ.உ. சிதம்பரம் | – | சுப்ரமணிய சிவா |
| IV. | டி. ரங்காச்சாரியார் | – | வி.எஸ். சீனிவாசன் சாஸ்திரி |

மேற்கண்ட இணையில் எது தவறானது?

(A) I மற்றும் IV மட்டும்

(B) II மட்டும்

(C) IV மட்டும்

(D) II மற்றும் III மட்டும்

(E) விடை தெரியவில்லை

197. Consider the statements on the middle Palaeolithic period and pick out the correct answer.

(i) The tools are smaller in size
(ii) They are found at Attirampakkam, Gudiyam and Vadamadurai
(iii) Urn burials have been found
(iv) Cultivation of food plants is an important trait

(A) (i) and (ii) are correct
(B) (ii) and (iii) are correct
(C) (iii) and (iv) are correct
(D) (i) and (iv) are correct
(E) Answer not known

இடை பழங்கற்காலம் பற்றிய பின்வரும் சொற்றொடர்களை கவனிக்க. பின் சரியான பதில்களை தேர்ந்தெடுத்து எழுதுக :

(i) கருவிகள் அளவில் சிறியன
(ii) அதிராம்பாக்கம், குடியம், வடமதுரை ஆகிய இடங்களில் நடந்த அகழ்வராய்ச்சியில் கிடைத்துள்ளன
(iii) முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன
(iv) உணவுப்பயிர்கள் பயிரிட்டனர்

(A) (i) மற்றும் (ii) சரி
(B) (ii) மற்றும் (iii) சரி
(C) (iii) மற்றும் (iv) சரி
(D) (i) மற்றும் (iv) சரி
(E) விடை தெரியவில்லை

198. Which racial group authored Indus valley civilisation?

(A) Aryan
(B) Dravidian
(C) Non-Aryan
(D) Pre-Aryan
(E) Answer not known

எந்த இனக்கூட்டம் சிந்துவெளி நாகரிகத்தினை உருவாக்கியது?

(A) ஆரியர்
(B) திராவிடர்
(C) ஆரியர் அல்லாதார்
(D) முந்தைய ஆரியர்
(E) விடை தெரியவில்லை

199. ―――――――― and ―――――――― and ―――――――― error's triple tyranny is oer. Their very names for aye extinct, then pain shall be no more.
In this Thirukkural what three things that far away from human being?

(A) Lust, Innocent, Dizzy
(B) Envy, Aspiration, Innocent
(C) Nimpiri, Dizzy, aspiration
(D) Dizzy, Aspiration, Lust
(E) Answer not known

――――――――, ――――――――, ―――――――― இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.
மேற்காணும் திருக்குறளில் எம்மூன்றும் கெட நோய் கெடும் என்கிறார் வள்ளுவர்?

(A) காமம், வெகுளி, மயக்கம்
(B) அழுக்காறு, அவா, வெகுளி
(C) நிம்பிரி, மயக்கம், அவா
(D) மயக்கம், அவா, காமம்
(E) விடை தெரியவில்லை

200. Which is the central theme of the Novel "Sool"?

(A) Caste discrimination
(B) Water problem
(C) Women empowerment
(D) Child marriage
(E) Answer not known

'சூல்' நாவலின் மையக் கதை எது?

(A) சாதிப்பாகுபாடு
(B) தண்ணீர் பிரச்சினை
(C) மகளிர் மேம்பாடு
(D) குழந்தைத் திருமணம்
(E) விடை தெரியவில்லை

## SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

## SPACE FOR ROUGH WORK

## SPACE FOR ROUGH WORK

# CYGS/2022

Register Number | | | | | | | | | | |

# 2022

## PAPER – II

## COMPULSORY TAMIL LANGUAGE ELIGIBILITY TEST (SSLC Standard) and GENERAL STUDIES (Degree Standard)

## This Booklet Contains

## Part-A Compulsory Tamil Language Eligibility Test (SSLC Std) and Part-B General Studies (Degree Std)

**Duration: Three Hours]** **[Total Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

---

SEAL

### IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This question booklet contains **200** questions.
3. **Part-B of answer sheet of the candidates will not be evaluated, if the candidate does not secure minimum qualifying mark (40% – i.e. 60 marks) in Part-A. For Part-A qualified candidates, marks obtained in Part-B only will be considered for ranking list.**
4. Before answering the questions, you shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. **If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes and get it replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.**
5. Answer **all** the questions. All the questions carry equal marks.
6. You must write your register number in the space provided on the top right side of this page. Do not write anything else on the question booklet.
7. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the memorandum of admission (Hall Ticket).
8. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with **BLACK INK BALL POINT PEN.** If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
9. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one correct answer, shade the one which you consider the best. **If you do not know the answer, you have to mandatorily shade (E).** In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
10. You should not remove or tear off any sheet from this question booklet. You are not allowed to take this question booklet and the answer sheet out of the examination room during the time of examination. After the examination, you must hand over your answer sheet to the invigilator. You are allowed to take the question booklet with you only after the examination is over.
11. **You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.**
12. Question in Sl. No 101 to 200 (Part-B) the English version is final.
13. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.